அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே,

<u>நாட்டுக்குப் பெறுமதியான நூலொன்று" எழுதும் நிகழ்ச்சித்திட்டம்</u>

அன்புக்குரிய மாணவர்கள் கடந்த மார்ச் 16ம் திகதி தொடக்கம் வீடுகளிலேயே இருந்து தங்களின் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு காலத்தைக் கழிப்பதை நாம் அறிவோம். வீட்டில் இருந்தே கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு தாங்கள் மேற்கொள்ளும் முயற்சியை பெரிதும் பாராட்டுகின்றோம். இவ் விடுமுறையை மேலும் பயனுள்ளதாக்குவதற்கு "நாட்டுக்குப் பெறுமதியான நூலொன்று" நிகழ்ச்சித் திட்டம் தங்களுக்குப் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது. தற்போது உங்களுக்கு இவ்விடுமுறை காலத்தில் வீட்டில் இருந்தே புத்தகம் ஒன்றை எழுதுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். தங்களது படைப்பாற்றலை மேம்படுத்தி, தாங்கள் ஒரு வளரிளம் எழுத்தாளராகப் பரிணமிப்பதற்கு இந்நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்களின் தெரிவுசெய்யப்பட்ட 10,000 ஆக்கங்களிலிருந்து சிறந்த 100 ஆக்கங்களுக்கு விசேட விருதுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், அவ் 100 புத்தகங்களை அச்சிட்டுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏனைய 9,900 ஆக்கங்களையும் மின் ஊடகங்களில் புத்தக வடிவில் வெளியிடுவதற்கும் கல்வியமைச்சு எதிர்பார்க்கின்றது.

எனவே, அன்புக்குரிய மாணவர்களே, தற்போது நாங்கள் எழுதுவதற்கு ஆரம்பிப்போம். நாம் எதை எழுதப் போகிறோம்? எம்மால் எழுதப்படக்கூடிய பல துறைகள் பற்றி தங்களது பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இப் புத்தகங்களை எழுதி முன்வைக்க முடியும். தரம் 1 மற்றும் தரம் 2 வகுப்பு மாணவர்களுக்கு சித்திரம்/ கவிதை/ சிறுவர் கதை/ சித்திரக்கதை / கேலிச்சித்திரம் உள்ளடங்களாக படைப்புச் சஞ்சிகை ஒன்றினை இப் போட்டிக்காக முன்வைக்க முடியும். அதேபோல், தரம் 3 தொடக்கம் தரம் 13 வரை கல்வி பயிலும் மாணவர்கள் தாங்கள் விரும்பிய எந்தவொரு இலக்கியப் படைப்பினையும் முன்வைக்க முடியும். அதற்காகப் பின்வரும் துறைகளிலிருந்து ஏதாவதொன்றைத் தெரிவுசெய்துகொள்ள முடியும்.

**நூல் வகை**

சிறுவர் கதைகள், கவிதையாக்கங்கள், இளையோர் இலக்கியப் படைப்புகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகவாக்கங்கள், மொழிபெயர்ப்புகள், வரலாற்றுக்கதைகள், மாயாஜாலக்கதைகள், அமானுஷ்யகதைகள், துப்பறியும் மர்ம கதைகள், நீதிவுவமைக்கதைகள், நாட்டார் கதைகள், விஞ்ஞான புனைகதைகள், சுற்றாடல் விவரணங்கள், சரிதைகள், சுயசரிதைகள், மோகினி தேவதைக்கதைகள், பண்டைய புராணக்கதைகள், சமய கதைகள், வீரதீரக்கதைகள், பாடவிடயசார்நூலகள், ஐதீக வரலாற்றுக்கதைகள், கலப்பு அம்ச நூல்கள் ஆகிய ஏதாவதொரு பிரிவில் இருந்து ஒன்றைத் தெரிவுசெய்து கொள்ளவும்.

**நாம் எதனை எழுதப் போகிறோம்...?**

- முதலாவதாக தாங்கள் எழுதவிழையும் காரணம் தொடர்பாக ஆழமாகச் சிந்திக்கவும்.
- அதன்பின், சிறிய சட்டகம் (புறக்குறிப்பு) ஒன்றை உருவாக்கிக் கொள்ளவும். (நூலுக்குள் எதனை உட்படுத்த விழைகின்றோம் என்பது தொடர்பாக)
- அடுத்த கட்டமாக, இந்த சட்டகத்தைத் தமக்குத் தேவையான விதத்தில் தயார் செய்து, ஒழுங்கமைத்து, பகுதிகளாகப் பிரித்து, நூலின் அடிப்படை சட்டகத்தைத் தயார் செய்துகொள்வதாகும். (தற்போது நாம் எழுதப் புகும் காரணங்களை தயார் செய்து முடித்தாயிற்று )
- அடுத்த கட்டமாக, இவ் ஒவ்வொரு பகுதிகளையும் எழுதி முடிக்க வேண்டும்.
- சகல ஆக்கங்களும் மிகவும் மனதைத் தொடக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். தாங்கள் விடய உள்ளடக்கம் தொடர்பாக/ நாவல்/ சிறுகதை/ ஐதீகக் கதை ஒன்று எழுதினாலும் அக் குறிப்புக்களில் குதூகலம், வாசிப்பதற்கான ஆசை ஏற்படல், வாசிப்பவர்களின் அறிவைத் தூண்டும் விதத்திலான குறிப்புகள் அடங்கியிருத்தலோடு, சிறுவர் உள்ளத்திற்கு ஏற்றவிதத்திலும் இருத்தல் வேண்டும்.
- தங்களது கையெழுத்துப் பிரதியை பல தடவைகள் வாசிக்கவும். அதில் குறைபாடுகள் ஏதும் இருப்பின், அவற்றைத் திருத்தி 2020.06.30 ஆம் திகதிக்கு முன்னர் தங்களது வகுப்பாசிரியரிடம் கையளிக்கவும்.

- பாடசாலையில் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கு அமைவாக முன்னட்டை, இரண்டாம் பக்கம், சமர்ப்பணம், நன்றி, முன்னுரை, உள்ளடக்கம் மற்றும் தங்களின் தனிப்பட்ட தகவல்களுடன் தங்களது புகைப்படத்தினையும் இணைத்து இறுதிப் பக்கத்தினைத் தயார் செய்யவும்.
- தாங்கள் கையெழுத்தாக எழுதியதை, கணினியின் ஊடாக அச்சுப் பொறிப்பதாயின் மிகவும் சிறப்பானதாகும். அதன் எழுத்து வடிவம் Bamini/Skoolapotha ஆகும்.
- தாங்கள் எழுதியது சிறந்த புத்தகமாயின், அதற்கு விருது கிடைப்பது நிச்சயமானதாகும். எனவே, இன்றே புத்தகத்தினை எழுத ஆரம்பியுங்கள். அது நாட்டுக்குப் பெறுமதியான நூலாகும். பாடசாலையில் உள்ள சகல மாணவ மாணவியரும் இவ் வேலைத்திட்டத்தில் இணைவீர்கள் என எதிர்ப்பார்க்கின்றோம். வெற்றிகரமாக எழுதப்படும் புத்தகத்துக்கு விருதினைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தங்களின் புத்தகம் கிடைக்கப்பெறும் வரை கல்வியமைச்சு எதிர்ப்பார்த்துக் காத்திருக்கும்.

மேலதிக தகவல்கள் :- Http://www.natlib.lk அல்லது Http://www.moe.gov.lk எனும் இணையதளத்தில்

வகுப்பாசிரியரின் தொலைபேசி இலக்கம் :- .......................................................

அதிபரின் தொலைபேசி இலக்கம் :- ........................…....................................

வலயக் கல்விப் பணிமனையின் இணைப்பாளரின் தொலைபேசி இலக்கம் :- .....................

அதிபரின் கையொப்பம் மற்றும் இரப்பர் முத்திரை :- ...............................................